**சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலக துணை இயக்குநர் (நிர்வாகம்–2) அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர்:– திரு. வெ. பாலாஜி.,**

**செ.மு.ஆணை எண். அநிபி.8/1989/ 2024** **நாள்.08.02.2024**

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி. ர. துர்கா, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது), இவ்வலுவலகம் – பணிவரன்முறை செய்து தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அநிபி5/149323/22, நாள். 21.12.2022.

••••••

**ஆணை:–**

கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பார்வையில் காணும் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500–71900 (Level–8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டு வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து, திருமதி. ர. துர்கா அவர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக 02.01.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து கொண்டார்.

3) எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, பதவி உயர்வில் **இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)** ஆக **02.01.2023 முற்பகல்** முதல் **இவ்வலுவலகத்தில்** பணிபுரிந்து வரும் திருமதி. ர. துர்கா அவர்களின் பணியினை 02.01.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

4) மேற்படி, தனியரின் பணிவரன்முறை செய்யப்படுவதை தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் அளிக்கப்படும் அரசு அலுவலருக்கான அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

...2...

5) மேலும், திருமதி. ர. துர்கா, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) அவர்கள் தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடப்பட்ட பின்னரே விதிகளின்படி இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையராவார்.

ஒம்/–வெ. பாலாஜி,
வேளாண்மை இயக்குநருக்காக,

பெறுநர்

திருமதி. ர. துர்கா,
இளநிலை உதவியாளர் (பி.அ),
'மாபதி' பிரிவு, இவ்வலுவலகம்.

**நகல்:** 'அபபி' மற்றும் 'பணம்' பிரிவுகள், இவ்வலுவலகம்.
**நகல்:** 'அநிபி–8' இருப்புக்கோப்பு.

//உத்திரவின்படி//

15/02/24
கண்காணிப்பாளர்.

15/2/24